**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**

**OS No.27/2015**

**24.02.2026 வா.சா.1 ரவிச்சந்திரன் த/பெ. ராமசாமி**

**சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எந்த தேதியில் தாவா சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்று கேட்டால் ஜீலை 2002 ல் கிரையம் பெற்றேன். ஆனால் தேதி பல வருடங்கள் ஆனதால் ஞாபகம் இல்லை. சொத்தை என் அப்பா , அம்மா மற்றும் என் பெயரில் கிரையம் பெற்றோம். நான்கு பத்திரங்களாக தனித்தனியாக கிரையம் பெற்றோம். அந்த நான்கு பத்திரங்களும் ஒரே தேதியிட்ட பத்திரங்கள்தான். நான்கு பத்திரங்களில் என் அப்பா அம்மா பெயரில் ஒன்றும், என் அப்பா பெயரில் ஒரு பத்திரம் , என் அம்மா பெயரில் ஒரு பத்திரம் மற்றும் என் பெயரில் ஒரு பத்திரம். நான்கு பத்திரங்களின் ஆவண எண் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

ஒரே நாளில் நான்கு பத்திரங்களும் ஏன் தனித்தனியாக எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் எங்கள் ஆடிட்டரின் ஆலோசனைப்படி செய்யப்பட்டது. நான்கு கிரைய பத்திரங்களின் கிரைய தொகை தெரியுமா என்றால் அப்பா பெயரில் தனியாக வாங்கியது ரூ.7,25,000/-, அம்மா பெயரிலும் அப்பா பெயரிலும் கூட்டாக வாங்கியது ரூ. 5,25,000/- , எனது பெயரில் வாங்கியது ஒன்பது லட்சத்திற்கு மேல், தொகை குறித்து குறிப்பிட்டு ஞாபகம் இல்லை. அம்மா மற்றும் அப்பா பெயரிலும் கூட்டாக வாங்கிய மற்றொரு ஆவணத்தின் கிரைய தொகை ரூ.5,25,000/-. மேற்படி கிரையம் பெற்ற தொகைகள் எங்களுக்கு எப்படி கிடைத்தது என்று கேட்டால் நானும் என் தந்தையும் வனத்துறையில் ஒப்பந்ததாரர்கள் என்ற முறையில் அதில் கிடைத்த வருமானத்தின் மூலம் கிரையம் பெறப்பட்டது. வன ஒப்பந்தம் எடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி கிரைய பத்திரங்களில் கிரையம் கொடுத்தநபர்களின் பெயர்கள் பெருமாள், பெருமாளின் மகன்கள் சம்பத் மற்றும் ராதாகிருஷ்ணன் அவார். பெருமாளுக்கு மொத்தம் 5 பிள்ளைகள். அவர்களின் பெயர் என்ன என்று கேட்டால் ராணி, சுமதி மற்றும் கோமதி. ராணி, சுமதி மற்றும் கோமதி மேற்கூறிய நான்கு பத்திரங்களிலும் கிரையம்

கொடுத்தவர்களாக காண்பிக்கவில்லை என்றால் சரிதான். அவர்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள். ராணி, சுமதி மற்றும் கோமதி ஆகியோரிடம் இருந்தும் நான் கிரையம் பெற்றிருந்தால்தான் ராணி பெயரில் பெருமாள் எழுதிவைத்திருந்த தான செட்டில்மெண்ட் பத்திரம் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் நாங்கள் ராணி , சுமதி மற்றும் கோமதியை பெருமாள் மற்றும் அவரது மகன்களுடன் சேர்ந்து கிரையம் கொடுக்க வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்களாகவே கிரையம் கொடுத்தார்கள்.

நாங்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை சரிபார்த்து ஆடிட்டர் மற்றும் வழக்கறிஞரின் ஆலோசனை பெற்றுதான் கிரையம் பெற்றேன். ஆடிட்டர் பெயர் என்ன என்றால் அவர் பெயர் பிரபாகரன். சட்டக்கருத்து எழுத்துபூர்வமாக பெற்றனோ என்றால் பெறவில்லை. சட்டக்கருத்து பெற்றிருந்தால் ராணி பெயருக்கு பெருமாள் எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பற்றி தெரிந்திருக்கும் என்று சொன்னால் அன்றைய தேதியில் வில்லங்கச்சான்றிதழில் ராணி பெயர் வரவில்லை. தான செட்டில்மெண்ட் சம்மந்தமாக ராணி செங்கம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்திருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் ராணிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

அந்த தீர்ப்பின் அடிப்படையில் ராணி பட்டா கேட்டு விண்ணப்பிருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ராணி பெயருக்கு வருவாய் துறை பட்டா சிட்டா ஆகியவற்றை மாற்றி கொடுத்தது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. ராணிக்கு சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்பாணையை பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் சுமார் 2010 என்று இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். தீர்ப்பு எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு 2006 ல் தாக்கல் செய்யப்பட்டது என்று மட்டும் தெரியும். அந்த வழக்கில் நாங்கள் சேர முயற்சிக்கவில்லை என்று கேட்டால் எங்கள் பெயரில் வழக்கு தாக்கல் செய்யாததால் நாங்கள் சேரவில்லை. செங்கம் நீதிமன்றத்தில் ராணிக்கு சாதகமாக வழங்கப்பட்ட தீர்ப்பு சட்டப்படி சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. அதை ரத்து செய்ய நான் கோரியிருப்பதும் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. எந்த தேதியில் ராணிக்கு பெருமாள் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று நான்

தெரிந்துகொல்லவில்லை என்றால் சரிதான். ஒரே தேதியில் ஒரே சொத்திற்கு நான்கு கிரையப்பத்திரங்கள் எழுதவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளை ஏமாற்றும் நோக்கத்துடன் மேற்படி கிரைய பத்திரங்கள் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த நான்கு கிரையபத்திரங்களில் சாட்சிகளின் பெயர் என்ன என்று கேட்டால் ராணி, கோமதி, சுமதி மற்றும் தனஞ்செயன். அகஸ்தியர் மற்றும் வீரபத்திரன் என்பவர்கள் இன்னார்கள் என்று நிரூபித்தவர்கள் என்று சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள்.

<u>வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை</u> – ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.